## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணி – திருமதி S. ரேவதி, முதுநிலை கண்காணிப்பாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் – முதல் நிலை நகராட்சி ஆணையராக வேற்றுப்பணியில் (on deputation) பணியாற்ற அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நக.1) துறை

அரசாணை (1டி) எண்.38 நாள் 29.01.2010.

படிக்க:

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.59653/1999/C1, நாள் 18.01.2010.

**ஆணை:**

தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணி சிறப்பு விதிகளின் 6(ii) என்னிட்ட விதியின்கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் முதுநிலை கண்காணிப்பாளராகப் பணிபுரியும் திருமதி S. ரேவதி அவர்களை வேற்றுப்பணியில் (on deputation) முதல் நிலை நகராட்சியில் ஆணையராகப் பணியாற்ற அனுமதிக்கப்படுகிறார். அவர் முதல்நிலை நகராட்சியில் ஆணையராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து இரண்டாண்டுகளுக்கு பணியாற்றுவார்.

2. 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 12(C) என்னிட்ட பிரிவின்படி தமிழ்நாடு மாநில ஆளுநர் அவர்கள் கீழ்க்காணும் பணி நியமனத்தைச் செய்கிறார்:-

> "நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் முதுநிலை கண்காணிப்பாளராகப் பணிபுரியும் திருமதி S. ரேவதி அவர்களை வேற்றுப்பணியில் முதல்நிலை நகராட்சியில் ஆணையராகப் பணி நியமனம் செய்யப்படுகிறார்."

3. திருமதி S. ரேவதி அவர்களுக்கு முதல்நிலை நகராட்சியில் உரிய பணியிடம் வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2.

4. மேலே பத்தி 2–ல் வேற்றுப்பணியில் முதல்நிலை நகராட்சியில் ஆணையராகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி S. ரேவதி அவர்கள், வேற்றுப்பணியில் நியமனம் செய்யப்படாமலிருந்தால், தனது தாய்த்துறையில் பெற்றுவரும் ஊதியத்தையே வேற்றுப் பணிக்காலத்திலும் ஆணையர் பணியிடத்தில் பெற்று வருவார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 5.
திருமதி S. ரேவதி, முதுநிலை கண்காணிப்பாளர் (நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம், கோயம்புத்தூர்–11.
தமிழ்நாடு மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.(பெயரில்)
தமிழ்நாடு மாநில தணிக்கையாயர் (Audit), சென்னை–18. (பெயரில்)
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, சென்னை –18.

<u>நகல்:-</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர் அவர்களின்
தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.